முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், ஏற்கெனவே 4 இடங்களில் நம்முடைய அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அதுபோல, 26 தனியார் தொழில் பயிற்சி நிலையங்களும் உள்ளன. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

213—

மாணவர் சேர்க்கை

***1131—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முழு முயற்சி எடுத்து வருகிறது. 25 ஆண்டுகளாக 50 இடங்களே இருந்த செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் 50 இடங்களிலிருந்து 100 இடங்களாக உயர்த்துவதற்கும், அதுபோல் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் 100 இடங்களிலிருந்து 150 இடங்களாக

2012 மே 4]

உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்திய மருத்துவ கவுன்சில் ஆய்வு முடிந்து அதன் முடிவினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுபோல், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் 100 மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து கடந்த மாதம் இந்திய மருத்துவ கவுன்சிலின் ஆய்வு முடிந்து, அதனுடைய முடிவினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்டு வருவதை மனதாரப் பாராட்டுகிறோம். அதேநேரத்தில், தமிழகத்தினுடைய மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் இல்லாமல் டாக்டர்கள் பற்றாக்குறையாக உள்ளார்கள். அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாநகராட்சி, நகராட்சிகளின்கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க இந்திய மெடிக்கல் கவுன்சில் அனுமதி பெறவும், கூடுதலான மாணவர்களை இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 17 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1,945 மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன. மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும்பொருட்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள 125 மாணவர் சேர்க்கை இடங்களை 250 ஆகவும், சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் தற்போது 150 மாணவர் சேர்க்கை இடங்களை 250 ஆகவும் உயர்த்துவதற்கு*

இந்திய மருத்துவக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டது. அதனை ஆய்வுசெய்து, இந்திய மருத்துவக் குழு தெரிவித்திருந்த சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கடந்த 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில், செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமானால் அதற்குரிய இந்திய மருத்துவ கவுன்சிலின் விதிகள் பின்பற்றப்பட வேண்டும். உள்கட்டமைப்பு வசதிகள் அதிகமாகவும், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்க வேண்டும். மேலும், நவீன மருத்துவப் பரிசோதனை உபகரணங்கள் மற்றும் மருத்துவம்சார் பணியாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க படிப்படியாக முயற்சி செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நடவடிக்கைகளுக்கு நன்றி. கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு தொழிலாளியினுடைய பங்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாணவர் சேர்க்கையினை அதிகரிப்பது குறித்ததுதான் மூலக் கேள்வி. திடீரென்று நீங்கள் கோவைக்கு jump ஆகாதீர்கள். Please sit down. வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*